Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 212/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW11 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சோமசுந்தரம் (காவல் ஆய்வாளர்) |
| Father's Name | – | நடராஜன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 09th January 2025 .

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது அவினாசி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணியாற்றிவருகிறேன். மகாலிங்கபுரக் காவல்நிலையத்தில் பணியாற்றிய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு ராஜாராம் அவர்கள் உடன் பணியாற்றிய வகையில் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.07.2016 ம் தேதி 11.20 மணிக்கு மகாலிங்கபுரக் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜாராம் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது தொண்டாமுத்தூரைச் சேர்ந்த தமிழரசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று நிலைய கு.எண்.155/2016 சட்டபிரிவுகள் 279, 304(A) (double death) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

மேற்படி முதல் தகவலறிக்கை **அதசாஆ. 4 ஆகும்.** வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பை புலன் விசாரணைக்காக நான் ஏற்றுக்கொண்டு அன்றைய தினமே மதியம் 02.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அர்ஜுன் மற்றும் விக்னேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகஜர் **அசாஆ.5,** மாதிரி வரைபடம் **அசாஆ.6** ஆகும். பின்னர் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு வந்து விபத்தில் இறந்துபோன பால்பாண்டி அவர்களின் பிரேதத்தின் மீது 3.15 மணி முதல் 5.15 வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் தமிழரசு , மணிகண்டன், மீனா, செல்வம், சக்திவேல், சேனாதிபதி ஆகியோர் முன்னிலையில் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத விசாரணைஅறிக்கை தயார் செய்தேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ.7** ஆகும்.

பின்னர் அன்றைய தினமே தகா 1672 திரு ஞானசுந்தரம் என்பவர் மூலம் பிரேதத்தை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் 25.07.2016 ம் தேதி அன்று இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன மற்றொரு நபரான ஜான் பாட்ஷா அவர்களின் பிரேதத்தின் மீது காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் சாகுல் அமீது, ரமேஷ், விஜயசாந்தி, அல்லா பாட்ஷா, கதீஜாபீபி ஆகியோர் முன்னிலையில் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத விசாரணைஅறிக்கை தயார் செய்தேன். மேற்படி பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ.8** ஆகும்.

பின்னர் இவ்வழக்கில் இறந்து போன பால்பாண்டி மற்றும் ஜான் பாட்ஷா பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவர் திரு கார்த்திகேயன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனைஅறிக்கைகளைப் பெற்றேன். அவைகள் முறையே **அதசா ஆ 9 மற்றும் அசாஆ 10** ஆகும். 25.07.2016 ம் தேதி இவ்வழக்கின் எதிரி ராஜேந்திரன் என்பவர் நிலையம் வந்து ஆஜரானவரை நிலையத்தில்வைத்து மாலை 04.00 மணிக்கு கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன்.

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 99 E 3587 Yamaha R15 and MMS TN 67 AY 9402 என்ற சிற்றுந்து வையும் வாகன ஆய்வுக்காக மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அனுப்பி வைத்தேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் திருஉலகநாதன் அவர்களை விசாரித்து ஆய்வறிக்கைகளைப் பெற்றேன். மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகன ஆய்வறிக்கைகள் முறையே **அசாஆ.11** மற்றும் **அசாஆ** 12 ஆகும்.

பின்னர் என்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது 279, 304(A) (double death) இதச பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தில் இறந்து போன பால்பாண்டியும் ஜான் பாட்ஷாவும் அசா.1,2,3,4 ன் நண்பர்கள் என்றால் சரிதான். சம்பவம் பற்றி மதியம் 1 மணிக்கு காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார்கள். சம்பவம் கோவை ரோட்டில் சிடிசி மேட்டின் இறக்கத்தில் திருவிகா நகர் செல்லும் கட்ரோடு அருகில் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருவிகா நகர் கட்ரோடு மேற்கு திசை நோக்கி உள்ளது. சம்பவத்தில் ஈடுபட்ட சிற்றுந்து தெற்கில் இருந்து வடக்கு நோக்கிச் சென்றது என்றால் சரிதான்.

இறந்துபோனவர்கள் ஓட்டிவந்த இரு சக்கர வாகனம் 200 சிசி கொண்ட அதிவேக வாகனம் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன பால்பாண்டி வாகன ஓட்டுநர் உரிமம் 12.02.2016 ம் தேதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன பால்பாண்டி அதிவேகமாக இருசக்கர வாகனத்தை இயக்கி சிற்றுந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அசா.1 முதல் 4 வரை யாரும் விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அல்ல என்றால் சரியல்ல. அசா.8 மற்றும் 9 மகஜர் சாட்சிகள் ஒரு வாரம் கழித்துதான் மகஜரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் இட்டோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.

உதவி ஆய்வாளர் சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் நான் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No.II,

Pollachi